1981 ஏப்ரல் 28]

திரு. ப. வெங்கடசுப்பிரமணியம்: மாண்புமிகு தலைவரவர்களே, இந்த சமச் சிக்கனத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டபோது, அந்தத் திட்டத்திற்கான 'பை-லாக்கள்' தயாரிக்கப்படவில்லை. ஏற்கனவே அதிலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டவர்கள் 58 வயதாகிவிட்ட காரணத்தால் அவர்கள் கட்டிய பணத்தைத் திருப்பிப் பெற முடியாத நிலை இருக்கிறது. அந்தப் பணத்தை திருப்பிக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். என். இராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைப்பற்றி அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடம்பூரில் கால்நடை மருத்துவமனை கட்டும் திட்டம்.

*வினா எண் 928—திரு. மு. அப்பாத்துரை: மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம் கடம்பூரில் கால்நடை மருத்துவமனை கட்ட தனியார் இனாமாக நிலம் கொடுக்க முன் வந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், உடனடியாக மருத்துவமனை கட்ட நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) கயத்தாறு ஊராட்சி ஒன்றியம் கடம்பூரைச் சேர்ந்த திரு ஆர். காசிராஜன் என்பவர் 1.95 ஏக்கா நிலத்தை கடம்பூர் கால்நடை மருந்தகக் கட்டிடம் கட்ட, நன்கொடையாகக் கொடுக்க முன் வந்துள்ளார்.

(ஆ) இந்த நிலத்திற்கு நன்கொடைப் பத்திரம் பதிவு செய்து நன்கொடையாக நிலத்தைப் பெறுவதற்கு கயத்தாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் துரித நடவடிக்கை எடுத்து வருகிறார். நன்கொடைப் பத்திரம் பெற்று கால்நடை பராமரிப்புத்துறை இயக்குநரிடமிருந்து கட்டடம் கட்டுவதற்கான செயற்குறிப்பு வந்ததும் அரசு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கும்.